### திருச்செங்கோட்டில் கத்தியால் வெட்டப்பட்டு உயிரிழந்த

# சிறுமியின் பெற்றோருக்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.24-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, சத்திநாயக்கன்பாளையம் கிராமத்தில் கத்தியால் வெட்டப்பட்டு உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சத்திநாயக்கன்பாளையம் கிராமம், குடித்தெருவைச் சேர்ந்த செந்தில் குமார், த/பெ.சண்முகம் என்பவர் கடந்த 27.07.2024 அன்று அவரது வீட்டிற்கு அருகில் வசிக்கும் சிறுமி தஸ்மிதா (வயது 10), த/பெ. பிரபு, தங்கராசு (வயது 50), த/பெ. பழனியப்பன் மற்றும் முத்துவேல் (வயது 35), த/பெ.ராஜீ ஆகிய மூவரையும் கத்தியால் வெட்டிய சம்பவத்தில் பலத்த காயமடைந்த சிறுமி தஸ்மிதா என்பவர் சேலத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் 22.08.2024 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் காயமடைந்து சேலம் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தங்கராசு மற்றும் முத்துவேல் ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுமி தஸ்மிதாவின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### சென்னை நகரக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ்

# மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஆக.24-**

**உலக வங்கியின் நிதியுதவியுடன் சென்னை நகர கூட்டாண்மைத் திட்டத்தின் (Chennai City Partnership Programme (CCP) கீழ், மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு வரவிற்கும் செலவிற்குமான வித்தியாசத் தொகை நிதியாக (Viability Gap Fund (VGF) ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

மாநகர் போக்குவரத்துக் கழகத்தை (MTC) உலகத்தரம் வாய்ந்த பொதுப் போக்குவரத்து அமைப்பாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் சென்னை நகர கூட்டாண்மைத் திட்டம் (CCP) செயல்படுத்தப்பட உள்ளது.

அதன்படி, தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு இடையே 20.10.2023 அன்று பொதுப் போக்குவரத்து சேவை ஒப்பந்தம் (Public Transport Service Contract PTSC) கையெழுத்தானது. இதன்மூலம், பேருந்து இயக்கத்தில் முக்கிய செயல்திறன் குறியீடுகளை (Key Performance Indicators (KPI) உறுதி செய்து, அதன் தொடர்ச்சியான செயல்பாடுகளுக்கு ஏற்ப வரவிற்கும் செலவிற்குமான வித்தியாசத் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கும்.

பொதுப் போக்குவரத்து சேவை ஒப்பந்தத்தின்படி முதலாவது ஆண்டு 2023-2024இல் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளில் 10 சதவிகிதம் பேருந்துகளுக்கு வரவிற்கும் செலவிற்குமான வித்தியாசத் தொகை நிதியாக ரூ.21.50 கோடி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இரண்டாவது ஆண்டு 2024 - 2025-இல் பொதுப் போக்குவரத்து சேவைகள் ஒப்பந்தத்தின் படி, மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளில் 50 சதவிகிதம் பேருந்துகளுக்கு வரவிற்கும் செலவிற்குமான வித்தியாசத் தொகை நிதியாக (VGF) ரூ.300 கோடி மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இதன்மூலம், போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்படும் பராமரிப்பு, எரிபொருள் மற்றும் இதர செலவுகள் ஈடு செய்யப்பட்டு, நாள்தோறும் சுமார் 35 இலட்சம் பயணிகள் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சேவையினை சிறப்பான முறையில் பயன்படுத்திட உறுதுணையாக இருக்கும்.

### தி.மு.க. பொறியாளர் அணி செயலி - புத்தகம் வெளியீடு!

# பொறியாளர் அணி சார்பில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – பரிசளித்து விழாப் பேருரை!

திருவண்ணாமலை, ஆக. 24 -

தி.மு.க. தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு அணிகளுக்கும் ஒரு பணியை வழங்கினார். அதன்படி தி.மு.க. பொறியாளர் அணிக்கு மாநிலம் முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி நடத்தி அதன் இறுதி விழாவை சென்னையில் நடைபெறவேண்டும் என உறுதி செய்யப்பட்டது. தலைவர் ஆணையை ஏற்று தி.மு.க. பொறியாளர் அணி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் அப்போட்டி நடத்தப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டு சுமார் 200 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மண்டல வாரியாக அரை இறுதி போட்டியினை மிக பிரம்மாண்டமாக பல்லாயிரக் கணக்கான பொறியியல் மாணவர்கள் முன்னிலையில் நடத்தி அதில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 26 மாணவர்களுக்கு நாளை (25ஆம் தேதி-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை கலைவாணர் அரங்கில் இறுதி போட்டி நடைபெறவுள்ளது.

இதனை தொடர்ந்து தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நாளை (25.08.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற உள்ளது. இதில் பொறியாளர் அணி செயலி மற்றும் செயல் திட்ட வெளியீட்டு விழா, எஸ்.கே.பி.கருணா எழுதிய “கலைஞர் கட்டிய தமிழ்நாடு” புத்தக வெளியீட்டு விழா, மாநில அளவில் பேச்சுப்போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா ஆகியவை நடைபெற உள்ளது.

காலை 10 மணியளவில அனைத்து மண்டலங்களிலும் பேச்சுப்போட்டியில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கான இறுதி போட்டி நடக்கிறது. நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை தாங்குகிறார். மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை எம்.பி. தயாநிதிமாறன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் பரிசளித்து வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும், சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.டி.சேகர், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

தொடர்ந்து மாலையில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு கழக துணை பொதுச் செயலாளரும், உயர் கல்வித்துறை அமைச்சருமான க.பொன்முடி தலைமை தாங்குகிறார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலை வகிக்கிறார். கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. “கலைஞர் கட்டிய தமிழ்நாடு” புத்தக அறிமுக உரையாற்றுகிறார்.

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறியாளர் அணி செயலி மற்றும் புத்தகத்தை வெளியிட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து விழா பேருரையாற்றுகிறார்.

இதில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### வி.ஐ.டி. பல்கலைக் கழக - அண்ணா அரங்கில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர்கள் துரைமுருகன் - எ.வ.வேலு - ஆர்.காந்தி மற்றும் முரசொலி செல்வம் - கனிமொழி கருணாநிதி எம்.பி. - கவிப்பேரரசு வைரமுத்து சிறப்புரை!

வேலூர், ஆக. 24-

வேலூரில் தமிழியக்கம் - வி.ஐ.டி. பல்கலைக் கழகம் மற்றும் பாவேந்தர் பாரதி தாசன் தமிழ்மன்றம் இணைந்து நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா 26.8.2024 காலை 10 மணி அளவில் வி.ஐ.டி. பல்கலைக் கழகம் அண்ணா அரங்கில் முனைவர் கோ.விசுவநாதன் தலைமையில் நடைபெறு கிறது.

வி.ஐ.டி. பல்கலைக் கழக துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், முனைவர் சேகர் விசுவநாதன், முனைவர் கோ. வி.செல்வம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முனைவர் கு.வணங்காமுடி வரவேற்றுப் பேசுகிறார். மு.சுகுமார் நோக்கவுரையாற்றுகிறார்.

தமிழியக்கம் பொதுச் செயலாளர் கருவியருவி அப்துல்காதர் தொடக்க வுரையாற்றுகிறார்.

கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் சிறப்புரையாற்றுகிறார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் செவ்வுரையாற்றுகின்றனர்.

முரசொலி செல்வம், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் நெகிழுரையாற்றுகின்றனர்.

கவிப்பேரரசு வைரமுத்து விழாப் பேருரையாற்றுகிறார்.

விழாவில், எஸ். ஜெகத் ரட்சகன் எம்.பி., கதிர் ஆனந்த் எம்.பி., எ.பி.நந்த குமார் எம்.எல்.ஏ., ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. வி.அமுலு எம்.எல்.ஏ., மேயர் சுஜாதா ஆனந்தகுமார், புலவர் வே.பதுமனார், சு. மோகன் குமார் ஆகியோர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

முனைவர் இரா. ஜெயகர் நன்றி கூறுகிறார்.

முனைவர் மரிய செபஸ் தியான் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.


